CC.No.186/2022

DATE:- 04.03.2025

PW1:- சுதா மஞ்சரி,க/பெ. சுரேஷ் ரெட்டி, வயது 57

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

1. நான் கடந்த 33 வருடங்களாக சமையல் எரிவாயு விநியோகம் செய்யும் தொழில் செய்து வருகிறேன். எதிரி எத்தனை வருடங்களாக என்னிடம் தொழில் செய்து வருகிறார் என்றால் கடந்த எட்டு, ஒன்பது வருடங்களாக தொழில் செய்து வருகிறார். துவாரகா என்டர்பிரைசஸ் இன் உரிமையாளர் என்பதற்கு இந்த நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு தொழில் பரிவர்த்தனைக்கும் இன்வாய்ஸ் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். எதிரி மீது எவ்வளவு தொகை கோரி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 13 லட்சம் ஆகும். ஒரே சமயத்தில் எதிரி 13 லட்சத்திற்கு தொழில் பரிவர்த்தனை செய்து வந்தாரா என்றால் அவ்வாறு இல்லை. ரன்னிங் அக்கவுண்ட் என்ற முறையில் எதிரி எங்களுடன் தொழில் செய்து வந்தார்.

2. வருடத்திற்கு எவ்வளவு தொகைக்கு எதிரி எங்களிடம் சமையல் எரிவாயு பெற்றுக் கொள்வார் என்றால் குறிப்பிட்டு கூற இயலாது. ஒவ்வொரு வருடமும் அது மாறும். மாதம் மாதம் தோறும் சமையல் எரிவாயுவின் தொகையும் மாறும். வெவ்வேறு காலகட்டங்களில் எதிரி என்னிடம் சமையல் எரிவாயு வாங்கியதற்கு பாக்கி தொகையுடன் மொத்தமாக சேர்த்து எதிரி வழக்கு காசோலை என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். என்னுடன் எப்பொழுது எதிரி தொழில் செய்வதை நிறுத்தினார் என்றால் கடந்த 2021 ஏப்ரல்

மாதம் நிறுத்திவிட்டார். அதன் பிறகு எதிரி எங்களுடன் தொழில் செய்வதை நிறுத்திவிட்டார் என்றால் சரிதான்.

3. ஒவ்வொரு வருடமும் எதிரி பாக்கி நிலுவைத் தொகை வைக்கும் பொழுது அதனை வருமான வரி கணக்கில் நான் காட்ட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு எதிரி கொடுக்க வேண்டிய பாக்கிய தொகையை வருமான வரியில் காட்டியிருந்தால் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலுமா என்றால் என்னால் சமர்ப்பிக்க இயலும். ( வருமான வரி ஆவணங்கள் கடந்த 2016 முதல் 2021 வருடம் வரை தாக்கல் செய்வதற்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).